THE RAMCO CEMENTS LIMITED
RAMCO

தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்

உத்தேசித்துள்ள மறவர்பெருங்குடி சுண்ணாம்பு கன்கர் குவாரி குத்தகை-III

158.865 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் சுண்ணாம்பு கன்கர் & களிமண் (கரிசல் மண்) அகழ்விப்பு திட்டகாலத்தில் சுண்ணாம்பு கன்கர் உற்பத்தி 28,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் மற்றும் களிமண் (கரிசல் மண்) உற்பத்தி 20,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் - மொத்த ஆழம் 3.0 மீ

மறவர்பெருங்குடி கிராம புல எண்கள் 100, 101, 103, 109, 119 to 132, 137 to 141, 404, 407 to 413, 415 to 416, 418, 429, 431 to 435, 437 to 440 & 442 to 457 பகுதிகள் &
T.கொப்புச்சித்தம்பட்டி கிராம புல எண்கள் 468, 538 to 544, 683 & 684 பகுதிகள்,
அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு

சொந்த பயன்பாட்டிற்காக சிறுகனிமங்கள் அகழ்விப்பு

வரையறுக்கப்பட்ட பகுதிக்கான அறிவிப்பு 02.04.2018-ம் தேதியிட்ட
கடித எண் 2171/MMC-2/2018-1 வாயிலாக 10 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது

சுரங்கத் திட்டத்திற்கான அங்கீகாரம், புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் 07.01.2025 தேதியிட்ட கடித எண். 583/MM7/2018 வாயிலாக முதல் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது

2006-ம் ஆண்டின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அரசாணையின்கீழ் சுற்றுச்சூழல் அனுமதி
அட்டவணை வரிசை எண் 1(a) & வகை 'B' (<250 ஹெக்டேர்)

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கையின் சுருக்கம்

(முடிவு ஆலோசனைகள் வழங்கப்பட்டபின், பொதுமக்கள் கருத்துக்கேட்பிற்காக)

முடிவு ஆலோசனைகள் : 07.04.2025 தேதியிட்டTOR அடையாள எண் TO25B0108TN5802389N
சுற்றுச்சூழல் தரவுகள் சேகரிப்பு : டிசம்பர் 2024 - பிப்ரவரி 2025 (குளிர் காலம்)

மே 2025

<u>சுற்றுச்சூழல் ஆலோசகர்</u>

ABC Techno Labs®
India Private Limited

ஏபிசி டெக்னோ லேப்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை

கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய அங்கீகார வாரியத்தால் (NABET) வரிசை எண் 1(a)-ன் கீழ் *(சுரங்கத் திட்டங்கள்) உட்பட பல்வேறு துறைகளுக்கு 'வகை-ஏ' சான்றிதழை 11.06.2023 தேதியிட்ட* NABET/EIA/2225/RA0290 கடிதம் வாயிலாகப் பெற்றுள்ளது - 16.11.2025 வரை *செல்லுபடியாகும்*
(Sl. No. 4 of QCI/NABET List)
நிறுவன ஆய்வகம், NABL *சான்றிதழை 03.04.2024தேதியிட்ட* TC-5770 கடிதம் வாயிலாகப் பெற்றுள்ளது - 02.04.2026 வரை *செல்லுபடியாகும்*

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கையின் சுருக்கம்

1.0 திட்ட அறிமுகம்

1.1 திட்ட முனைவோர்

தி/எ். தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் (RCL), ராம்கோ குழுமத்தின் முன்னணி நிறுவனமாகும். RCL நிறுவனம் சிமெண்ட் உற்பத்தியில் தென்னிந்தியாவில் இரண்டாவது பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனமாகவும், இந்திய அளவில் ஆறாவது பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனமாகவும் திகழ்கிறது. RCL நிறுவனம் இந்தியாவிலுள்ள தனது சிமெண்ட் ஆலைகளின் மூலம் ஆண்டொன்றிற்கு 16.85 மில்லியன் டன்கள் சிமெண்ட் உற்பத்தி செய்து வருகிறது. RCL நிறுவனம், சாதாரண போர்ட்லேண்ட் சிமெண்ட் (OPC), போர்ட்லேண்ட் போஸோலேனா சிமெண்ட் (PPC), ஸ்லாக் சிமெண்ட் (PSC), காம்போஸிட் சிமெண்ட் (CC) மற்றும் கட்டுமான பணிக்கான சிமெண்ட் (MC) முதலியவற்றை உற்பத்தி செய்து 'ராம்கோ' என்ற முத்திரைப் பெயரில் விற்பனை செய்து வருகிறது. RCL நிறுவனத்தின் முக்கிய விற்பனை மையங்கள் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், தெலங்கானா, கேரளா, கர்நாடகா, ஓதிஷா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் அமைந்துள்ளன.

RCL நிறுவனம் தனது ராமசாமி ராஜாநகர் சிமெண்ட் ஆலை வளாகத்தை தமிழ்நாடு மாநிலம், விருதுநகர் வட்டம் & மாவட்டம், துலுக்கப்பட்டி, தம்மநாயக்கன்பட்டி & வச்சக்காரப்பட்டி கிராமங்களில், 1961-62-லிருந்து இயக்கி வருகிறது. இநத ஆலை, 01.03.2023-லிருந்து 1.44 மில்லியன் டன்கள் கிளிங்கர் மற்றும் 2.7 மில்லியன் டன்கள் சிமெண்ட் உற்பத்திக்கு இயக்கப்பட்டு வருகிறது. RCL நிறுவனம் ஆர்ஆர் நகர் சிமெண்ட் ஆலையில், பழைய லைன்-IIவை புதுப்பித்து, லைன்-I & லைன்-III-ன் இயக்கங்களை மேம்படுத்தி, மேம்படுத்தப்பட்ட தற்போதுள்ள 3 லைன்களையும் இயக்க உத்தேசித்துள்ளது. விரிவாக்கத்திற்குப்பின், கிளிங்கர் ஆண்டொன்றிற்கு 2.76 மில்லியன் டன்களாகவும் & சிமெண்ட் ஆண்டொன்றிற்கு 4.00 மில்லியன் டன்களாகவும் உற்பத்தி அதிகரிக்கும்.

RR நகர் சிமெண்ட் ஆலையின் சுண்ணாம்புக்கல் தேவை அனைத்தும், பந்தல்குடி பகுதியிலுள்ள சொந்த பயன்பாட்டிற்கான சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் மற்றும் சுண்ணாம்பு கன்கர் படிமக் குத்தகைகள் ஆகியவற்றின் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. ஒளியியல் கோட்பாடுகளின் மூலம் கனிமங்களைப் பிரித்து வகைப்படுத்தும் வசதியுடன் கூடிய, பொதுவான, மையப்படுத்தப்பட்ட சுண்ணாம்புக்கல் உடைக்கும் ஆலை (கிரஷர் - உள்ளீட்டளவு ஆண்டொன்றிற்கு 2.0 மில்லியன் டன்கள் & தூய்மையான கனிம உற்பத்தித்திறன் ஆண்டொன்றிற்கு 1.88 மில்லியன் டன்கள்), பந்தல்குடியில், RR நகர் சிமெண்ட் ஆலையிலிருந்து தென்கிழக்கில் 18 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கிரஷர் அமைவிடத்திற்கு அருகில், பந்தல்குடி சுண்ணாம்பு கன்கர் கனிமச் சுத்திகரிப்பு ஆலையை (ஆண்டொன்றிற்கு 2.00 மில்லியன் டன்கள் உள்ளீட்டளவு) இயக்கி வருகிறது. சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் மற்றும் சுண்ணாம்பு கன்கர் குவாரி குத்தகைகள், பந்தல்குடி சுண்ணாம்புக்கல் உடைக்கும் ஆலை & கன்கர் கனிமச் சுத்திகரிப்பு ஆலை முதலியன RR நகர் சிமெண்ட் ஆலையுடன், RCL நிறுவனத்துக்குச் சொந்தமான தார்ச்சாலையின் (40+10 கிமீ) மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

RCL நிறுவனம், தமிழ்நாடு, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், மறவர்பெருங்குடி கிராம புல எண்கள் 100, 101, 103, 109, 119 to 132, 137 to 141, 404, 407 to 413, 415 to 416, 418, 429, 431 to 435, 437 to 440 & 442 to 457 பகுதிகள் & (தெற்கு) T.கொப்புச்சித்தம்பட்டி கிராம புல எண்கள் 468, 538 to 544, 683 & 684 பகுதிகளில் 158.865 ஹெக்டேர் விஸ்தீரணத்தில், சுண்ணாம்பு கன்கர் மற்றும்

களிமண் (கரிசல் மண்) ஆகியவற்றின் உற்பத்திக்காக, **மறவர்பெருங்குடி சுண்ணாம்பு கன்கர் குவாரி குத்தகை-III**-யை உத்தேசித்துள்ளது (**படம்** 1.1). குவாரி குத்தகைக்காக விண்ணப்பிக்கப்பட்ட மொத்த பரப்பளவும் RCL நிறுவனத்துக்குச் சொந்தமான பட்டா நிலங்களாகும். அரசு மற்றும் வனநிலங்கள் எதுவும் கிடையாது. இந்த திட்டத்தால் மறுசீரமைப்பு மற்றும் மறுகுடியமர்வு (R&R) தேவைகள் எதுவும் கிடையாது. இத்திட்டத்திற்கு எதிராக எந்த வழக்குகளும் நிலுவையில் இல்லை. FMB வரைபடம் **ப்ளேட்-I** ஆகவும், குத்தகைப் பகுதி மற்றும் அருகிலுள்ள குடியிருப்புகள் கூகுள் எர்த் படம் **ப்ளேட்-II** ஆகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

RCL நிறுவன தலைமை அலுவலகத் தொடர்புக்கான முகவரி :-

திரு. M.சீனிவாசன்
செயலாண்மை இயக்குனர் (இயக்கங்கள்)
தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்,
5-வது தளம், ஆராஸ் கார்ப்பொரேட் சென்டர்,
98A, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண் : 044-28478666 & தொலைநகல் எண் : 044-28478676
மின்னஞ்சல் முகவரி : ramcoenv@ramcocements.co.in

RR நகர் சிமெண்ட் ஆலைத் தொடர்புக்கான முகவரி :

திரு. S.லட்சுமணன்,
உதவி துணைத்தலைவர் (உற்பத்தி),
தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்,
ராமசாமிராஜா நகர் அஞ்சல்,
விருதுநகர் மாவட்டம்,
தமிழ்நாடு - 626 204
தொலைபேசி எண்கள் : 04562-256201 – 256203
தொலைநகல் எண் : 04562-256268

1.2 திட்ட விபரம்

திட்டம் : உத்தேசித்துள்ள மறவர்பெருங்குடி சுண்ணாம்பு கன்கர் குவாரி குத்தகை-III - 158.865 ஹெக்டேர் விஸ்தீரணத்தில், சுண்ணாம்பு கன்கர் & களிமண் (கரிசல் மண்) அகழ்விப்பு - திட்டகாலத்தில் சுண்ணாம்பு கன்கர் உற்பத்தி 28,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் மற்றும் களிமண் (கரிசல் மண்) உற்பத்தி 20,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் - மொத்த ஆழம் தரைமட்டத்திற்கு கீழே 3 மீ - தமிழ்நாடு, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், மறவர்பெருங்குடி மற்றும் (தெற்கு) T.கொப்புச்சித்தம்பட்டி கிராமங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்ட அமைவிடம் : குத்தகைப்பகுதியிலிருந்து பந்தல்குடி மேற்கில் 4.3 கி.மீ தொலைவில் உள்ளது. பந்தல்குடியிலிருந்து கொப்புச்சித்தம்பட்டி மற்றும் மறவர்பெருங்குடி கிராமங்களுக்குச் செல்லும் சாலை குத்தகைப்பகுதி வழியாக செல்கிறது (7.0 கி.மீ). குவாரி குத்தகையின் எல்லையிலிருந்து, அருகிலுள்ள மறவர்பெருங்குடி கிராமம் கிழக்கு தென் கிழக்கில் 0.4 கி.மீ தொலைவிலும், கொப்புச்சித்தம்பட்டி கிராமம் வடக்கில் 1.2 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளன. அருகிலுள்ள மறவர்பெருங்குடி கன்கர் குவாரி-II, உற்பத்தியின் இறுதிநிலையை நெருங்கிக் கொண்டிருப்பதால், 500 மீ சுற்றளவிற்குள் வேறு குவாரிகள் எதுவும் இல்லாததால் குவாரிகள் தொகுப்பிலில்லை.

Fig. : 1.1 Index Map



Plate : I Lease Area in Village FMB



Plate : II Lease Area in Google Earth Imagery



சட்டப்பூர்வ ஒப்புதல்கள் : வரையறுக்கப்பட்ட பகுதிக்கான அறிவிப்பு, தமிழ்நாடு மாநில தொழிற்சாலைகள் துறையின் 02.04.2018-ம் தேதியிட்ட கடித எண் 2171/MMC-2/2018-1 வாயிலாக 10 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது. சுரங்கத் திட்டத்திற்கான முதற்கட்ட ஒப்புதல், தமிழ்நாடு அரசு புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் 08.06.2018 தேதியிட்ட கடித எண் 583/MM10/2018/LK/Vnr வாயிலாக கன்கர் உற்பத்தி ஆண்டொன்றிற்கு 6,00,050 டன்கள் மற்றும் களிமண் (கரிசல் மண்) உற்பத்தி ஆண்டொன்றிற்கு 30,000 டன்கள் என்று வழங்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட சுரங்கத் திட்டத்திற்கான ஒப்புதல், புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் 07.01.2025 தேதியிட்ட கடித எண் Rc.No.583/MM7/2018 வாயிலாக முதல் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுரங்க திட்டம் : துளையிடுதல் மற்றும் வெடித்தல் செயல்பாடுகள் எதுவுமின்றி, இயந்திரமயமாக்கப்பட்ட திறந்த நிலை அகழ்விப்பு முறையில் அகழ்விப்பான்கள்-டிப்பர்களைப் பயன்படுத்தி, அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அகழ்விக்கப்பட்ட கன்கர் 25 டன் டிப்பர்கள் மூலம் பந்தல்குடி கன்கர் கனிமச் சுத்திகரிப்பு ஆலைக்கு அடுத்தகட்ட செயல்முறைகளுக்காகக் கொண்டு செல்லப்படும். மேற்பரப்பு களிமண் (கரிசல் மண்) 25 டன் டிப்பர்கள் மூலம் RR நகர் சிமெண்ட் ஆலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிமெண்ட் உற்பத்திக்கு தரத்திற்கான திருத்துபொருளாக உபயோகப்படுத்தப்படும்.

முதல் திட்டகாலத்தில், சுண்ணாம்பு கன்கர் உற்பத்தி 28,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் மற்றும் களிமண் (கரிசல் மண்) உற்பத்தி 21,38,180 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் - மொத்த ஆழம் 3.0 மீ – என்ற அளவில் அகழ்விப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். சுமார் 20,00,000 டன்கள் களிமண் (கரிசல் மண்) சிமெண்ட் உற்பத்திற்கு உபயோகிக்கப்படுத்தப்படும். மீதமுள்ள 1,38,180 டன்கள் களிமண் மொத்தமும், 5-வது ஆண்டில், அகழ்விக்கப்பட்ட பள்ளங்களில் மீண்டும் இட்டு நிரப்ப உபயோகப்படுத்தப்படும்.. தாது : தள்ளுபடி சேர்மான விகிதம் 1:0.029 என்ற அளவில் இருக்கும். **குவாரியின் ஆயுள், 10 ஆண்டுகள்.** இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் தரைமட்டத்திற்கு கீழே 12-15 மீ ஆழத்தில் உள்ளதால், குவாரி **அகழ்விப்புப் பணிகள் நிலத்தடி நீர்மட்டத்தில் குறுக்கிடாது**. சுரங்க வரைபடம், பசும்பரப்பு மேம்பாடு முதலியன **படம் - 2.1**-ல் கொடுக்கப்பட்டுள்ளது. சுரங்க விபரங்கள் **அட்டவணை 1.1**-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

<u>சுரங்க விபரங்கள் :</u>

அகழ்விக்கப்படக்கூடிய கனிமச் செறிவின் அளவு	:	கன்கர் 30,71,388 டன்கள் களிமண் (கரிசல்மண்) 23,45,385 டன்கள்
உத்தேசிக்கப்பட்டுள்ள உற்பத்தி (அதிகபட்சம்)	:	கன்கர்-ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் & களிமண் ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள்
தாது : தள்ளுபடி சேர்மான விகிதம்	:	1:0.029
சுரங்க மட்டக் குறிமேடையின் உயரம் & அகலம்	:	- (சுரங்க மட்டக் குறிமேடை எதுவுமில்லை)
குவாரியின் ஆயுள்	:	10 ஆண்டுகள்
ஆண்டொன்றிற்கு பணிநாட்கள்	:	300 பணிநாட்கள் (2 ஷிப்டுகள்)
இறுதிநிலையில் பள்ளத்தின் அதிகபட்ச ஆழம்	:	தரைமட்டத்திற்கு கீழே 3 மீ

குவாரி அகழ்வுப் பணிகள் நிலத்தடி நீர்மட்டத்தில் குறுக்கிடாது.

படம் : 2.1 பசும்பரப்பு மேம்பாட்டுடன் சுரங்க வரைபடம்



அட்டவணை : 1 குத்தகை விபரங்கள்

வ. எண்	காரணிகள்	சுரங்க விபரங்கள்
1	திட்டத்தின் பெயர்	மறவர்பெருங்குடி சுண்ணாம்பு கன்கர் குவாரி குத்தகை-III
2	சுரங்கக் குத்தகைதாரர்	தி/எ். தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் (RCL)
3	சுரங்க விஸ்தீரணம்	158.865 ஹெக்டேர்
4	குத்தகைப் பத்திரப் பதிவு	புதிய குத்தகை - சுற்றுச்சூழல் அனுமதி பெற்றபின்பு செயல்படுத்தப்படும்
5	குவாரி குத்தகைக் காலம்	குவாரி குத்தகை செயல்பாட்டு தேதியிலிருந்து 10 ஆண்டுகள்
6	சுரங்க அமைவிடம்	தமிழ்நாடு, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், மறவர்பெருங்குடி மற்றும் T.கொப்புச்சித்தம்பட்டி கிராமங்கள்
7	நில உரிமை	தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் சொந்த பட்டா நிலங்கள்
8	நிலவியல் (பாறையியல்) பண்புகள்	மேற்பரப்பு கரிசல் மண் : தரைமட்டத்திற்கு கீழே 0-1.5 மீ பருமன் (சராசரி ஆழம் 1.25 மீ), சுண்ணாம்பு கன்கர் படுகை : தரைமட்டத்திற்கு கீழே 1.5-3.0 மீ பருமன் (சராசரி ஆழம் 1.25 மீ)
9	அனுமதிக்கப்பட்ட கனிமங்கள்	சுண்ணாம்பு கன்கர் மற்றும் களிமண் (கரிசல் மண்)
10	சுரங்க இயக்கத் தொடக்கம்	- புதிய குத்தகை, அனைத்து சட்டப்பூர்வ ஒப்புதல்களும் பெற்றபின்பு தொடங்கப்படும்.
11	சுரங்கத் திட்ட ஒப்புதல்கள்	மாற்றியமைக்கப்பட்ட சுரங்கத் திட்டத்திற்கான ஒப்புதல், புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் 07.01.2025 தேதியிட்ட கடித எண் Rc.No.583/MM7/2018˙ வாயிலாக முதல் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
12	கடந்த கால உற்பத்தி (தொடக்கத்திலிருந்து)	- புதிய குத்தகை
13	அளவீடு செய்யப்பட்ட கனிமச் செறிவு	சுண்ணாம்பு கன்கர் - 43,68,788 டன்கள் களிமண் (கரிசல் மண்) - 33,36,165 டன்கள்
14	அகழ்விக்கப்படக் கூடிய கனிமச் செறிவு	சுண்ணாம்பு கன்கர் - 30,71,388 டன்கள் களிமண் (கரிசல் மண்) - 23,45,385 டன்கள்

15	இதுவரை உற்பத்தி	- எதுவுமில்லை. புதிய குத்தகை
16	அகழ்வித்து வெளியே கொண்டு செல்லப்பட்ட அளவு	- எதுவுமில்லை. புதிய குத்தகை
17	அகழ்வுப் பணி செயல்முறை	**துளையிடுதல் மற்றும் வெடித்தல் செயல்பாடுகள் எதுவுமின்றி,** இயந்திரமயமாக்கப்பட்ட திறந்த நிலை அகழ்விப்பு முறையில் அகழ்விப்பான்கள்-டிப்பர்களைப் பயன்படுத்தி, அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அகழ்விக்கப்பட்ட கன்கர் 25 டன் டிப்பர்கள் மூலம் பந்தல்குடி கன்கர் கனிமச் சுத்திகரிப்பு ஆலைக்கு அடுத்தகட்ட செயல்முறைகளுக்காகக் கொண்டு செல்லப்படும். மேற்பரப்பு களிமண் (கரிசல் மண்) 25 டன் டிப்பர்கள் மூலம் RR நகர் சிமெண்ட் ஆலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிமெண்ட் உற்பத்திக்கு தரத்திற்கான திருத்துபொருளாக உபயோகப்படுத்தப்படும்.
18	உத்தேசிக்கப்பட்டுள்ள உற்பத்தி அளவு	திட்டகாலத்தில், சுண்ணாம்பு கன்கர் உற்பத்தி 28,00,000 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் (அதிகபட்சம்) மற்றும் களிமண் (கரிசல் மண்) உற்பத்தி 21,38,180 டன்கள் @ ஆண்டொன்றிற்கு 1.00 மில்லியன் டன்கள் (அதிகபட்சம்)
19	நிலத்தடி நீர் மட்டம் குறுக்கீடு	குவாரியின் அதிகபட்ச ஆழம் 3.0 மீ. நிலத்தடி நீர் மட்டம் தரைமட்டத்திற்கு கீழே 12-15 மீ ஆழத்தில் உள்ளதால், குவாரி **அகழ்விப்புப் பணிகள் நிலத்தடி நீர்மட்டத்தில் குறுக்கிடாது.**
20	திட்ட மதிப்பீடு	ரூ.4.75 கோடிகள்
21	திட்ட காலம்	குவாரி குத்தகையின் ஆயுள் 10 ஆண்டுகள்
22	மறுசீரமைப்பு மற்றும் மறுகுடியமர்வு தேவை	இல்லை
23	திட்டத்திற்கு எதிராக வழக்குகள்	இல்லை
24	கூட்டாண்மை சுற்றுச்சூழல் பொறுப்பு நிதி (CER) ஒதுக்கீடு	ரூ.9.50 லட்சங்கள்
25	நிதிசார் உறுதி	தற்போது இல்லை
26	திட்ட விதிமீறல்கள்	இல்லை

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு : சிறுகனிமங்கள் அகழ்விப்பதற்கான குவாரி குத்தகைகள் (<250 ஹெக்டேர்) அனைத்தும் 2006-ம் ஆண்டின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அரசாணையின்படி வரிசைஎண் 1(a)-ன் கீழ், Category 'B1' என வகைபடுத்தப்பட்டு, 158.865 ஹெக்டேர் விஸ்தீரணமுள்ள இந்த திட்டத்திற்கு, தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் சுற்றுச்சூழல் அனுமதியைப் பெறுவது அவசியமாகிறது. எனவே, குத்தகைதாரரான RCL நிறுவனத்தால் 07.02.2025 அன்று Parivesh தளத்தில் கணினி வழி விண்ணப்பிக்கப்பட்ட திட்ட எண் SIA/TN/MIN/522992/2025 வாயிலாக விண்ணப்பிக்கப்பட்டது. கணினி வழியாக ஆய்வுக்கட்டணம் செலுத்தப்பட்ட பின்பு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்தால் 01.03.2025 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்திட்டம், தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டுக் குழுவின் (SEAC-TN) 01.03.2025-ல் நடைபெற்ற 538-வது அமர்வு மற்றும் 01.04.2025-ல் நடைபெற்ற மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்தின் அமர்வு ஆகியவற்றில் பரிசீலிக்கப்பட்டு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான **புதிய முடிவு ஆலோசனைகள்** (TOR), பொதுமக்கள் கருத்துக்கேட்புடன், 01.04.2025 தேதியிட்ட TOR அடையாள எண் TO25B0108TN5802389N (File No. 11826/2025) வாயிலாக வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் ஆலோசக நிறுவனமான, தி/ள். ஏபிசி டெக்னோ லேப்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்-சென்னை, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான, Quality Council of India – National Accreditation Board for Education and Training (QCI-NABET)-ன் அங்கீகாரத்தை, 11.06.2023 தேதியிட்ட ஆவணம் NABET/EIA/2225/RA 0290 வாயிலாகப் பெற்றுள்ளது (16.11.2025 வரை செல்லுபடியாகக்கூடியது) (Sl. No. 4 of QCI-NABET List). மேலும், ஏபிசி டெக்னோ லேப்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன ஆய்வகம், NABL-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (Certificate No. TC-5770 dated 03.04.2024 - 02.04.2026 வரை செல்லுபடியாகக்கூடியது).

MoEF&CC-ன் 29.08.2017 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணை எண் J-11013/41/2006-IA-II(I) (Part)-யின்படி, டிசம்பர் 2024 - பிப்ரவரி 2025 காலத்தில் (குளிர் காலம்) சேகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தரவுகள் மற்றும் புள்ளி விபரங்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை தயாரிப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 2006-ம் ஆண்டின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அரசாணையில் உள்ள பொது அமைப்பின்படியும், பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனைகளின் படியும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை (EIA Report) தயாரிக்கப்பட்டு, அதன் சுருக்கம் (ஆங்கிலம் & தமிழில்), பொதுமக்கள் கலந்தாய்வு/கருத்து கேட்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.0 சுற்றுச்சூழல் விளக்கம்

2.1 சுற்றுச்சூழல் அமைப்பு

சுண்ணாம்பு கன்கர் குவாரி குத்தகை-III, அட்சரேகை 9°23'22.30" N- 9°24'05.25" N மற்றும் தீர்க்கரேகை 78°09'06.02"E to 78°10'42.63" E ஆகியவற்றிற்கிடையில் அமைந்துள்ளது - Survey of India Topo Sheet No. 58 K/3 (படம் 1.2). இப்பகுதி, நிலநடுக்க மண்டலம்-III-ல் அமைந்துள்ளது. குவாரி குத்தகை அமைவிடத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எதுவும் இல்லை. குத்தகை எல்லைகளிலிருந்து 10 கி.மீ சுற்றளவுப் பகுதிகளில், சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய பூங்காக்கள், வனவிலங்கு சரணாலயங்கள், உயிர்க்கோள காப்பகங்கள், யானை வழித்தடங்கள், காப்புக்காடுகள், சதுப்பு நிலங்கள், அலையாத்திக் காடுகள், தொல்லியல் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்கள், பாரம்பரிய நினைவிடங்கள் எதுவும் அமைந்திருக்கவில்லை. குவாரி குத்தகைக்கு 2006-ம் ஆண்டின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அரசாணையின் பொது விதிகள் எதுவும் பொருந்தாது.

பருவகால ஆறான உப்பு ஓடை, சுரங்கக் குத்தகைப் பகுதியின் வடிகாலாக அமைந்து வடகிழக்கில் 0.05 கி.மீ தொலைவில் பாய்கிறது. பருவகால ஆறான வைப்பார் ஆறு தென்மேற்கில் 18 கி.மீ தொலைவில் பாய்கிறது. மன்னார் வளைகுடா கிழக்கில் 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை-38-ன் மதுரை-தூத்துக்குடி பகுதி (பந்தல்குடி புறவழிச்சாலையுடன்) மேற்கில் 4.1 கி.மீ தொலைவில் உள்ளது. தெற்கு இரயில்வேயின் அகல இரயில் பாதை (விருதுநகர்-அருப்புக்கோட்டை-மானாமதுரை பகுதி) வடக்கு-வடமேற்கில் 15.5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. மதுரை விமானநிலையம் வடக்கு-வடமேற்கில் 48 கி.மீ தொலைவிலும், தூத்துக்குடி வ.உ.சி துறைமுகம் தெற்கில் 70 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளன.

குத்தகையின் எல்லையிலிருந்து, அருகிலுள்ள மறவர்பெருங்குடி கிராமம் கிழக்கு தென்கிழக்கில் 0.4 கி.மீ தொலைவிலும், கொப்புச்சித்தம்பட்டி கிராமம் வடக்கில் 1.2 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளன. பந்தல்குடி மேற்கில் 4.3 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. தாலுக்கா தலைமையிடமான அருப்புக்கோட்டை வடக்கு-வடமேற்கில் 13.5 கி.மீ தொலைவிலும், மாவட்டத் தலைமையிடமான விருதுநகர் வடமேற்கில் 27.5 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளன. RCL நிறுவனம், இப்பகுதியில் சொந்த பயன்பாட்டிற்கான சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் மற்றும் சுண்ணாம்பு கன்கர் குத்தகைகளை கடந்த 60 வருடங்களாக இயக்கிவருகிறது. பந்தல்குடியில் ஸ்ரீ பரமேஸ்வரி நூற்பாலை இயங்கிவருகிறது.

Fig. : 1.2 Topo Map - 10 km Radius



Survey of India Topo Sheet No.58K/3
No ESA/ESZ

2.2 சுற்றுச்சூழல் நிலை

குவாரி குத்தகையின் விளிம்பு எல்லையிலிருந்து 10 கி.மீ சுற்றளவுள்ள பகுதி (**படம்** 3.1), டிசம்பர் 2024 - பிப்ரவரி 2025 குளிர் காலத்தில், சுற்றுச்சூழலின் நிலையை ஆராய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. சுற்றுச்சூழல் நிலை ஆய்வின் போது, திட்ட ஆய்வுப் பகுதியில் தற்போதுள்ள தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கச் செயல்பாடுகளால் உண்டாகும் ஒருங்கிணைந்த தாக்கங்களைக் கருத்தில் கொண்டு சுற்றுச் சூழல் கண்காணிப்பிற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. ஆய்ந்தறியப்பட்ட சுற்றுச்சூழல் பண்புகளின் நிலை குறித்த சுருக்கம் **அட்டவணை** 2.1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை : 2.1 சுற்றுச்சூழலின் தற்போதைய அளவுகள்

சுற்றுச்சூழல் அங்கம்	காரணிகள்	குறைந்த பட்ச அளவு	அதிகபட்ச அளவு	சராசரி அளவு	அனுமதிக்கப்பட்ட வரையறைகள்
சுற்றுப்புற காற்றின் தரம், ug/m^3	PM2.5	10	44	**21.7**	**60**
	PM10	17	66	**36.8**	**100**
	SO_2	6	23	**13.2**	**80**
	NOx	6	25	**15.4**	**80**
சுற்றுப்புற ஓசையளவுகள், dB(A)	Leq-Day	38.9	47.0	**43.7**	**55**
	Leq-Night	38.2	44.8	**42.1**	**45**
நிலமேற்பரப்பு நீராதாரங்கள்	TDS, mg/l	260	370	-	**500/2100**
நிலத்தடி நீர்	TDS, mg/l	290	1120	-	**500-2000**
மண்ணின் தரம்	EC, mmhos/cm	1.48	1.74	-	**0.2-0.5**
	SAR	2.19	3.28	-	**<5**

Legend : PM2.5-Particulate Matter size less than 2.5 um; PM10-Respirable Particulate Matter size less than 10 um; SO_2-Sulphur dioxide; NOx-Oxides of Nitrogen; Leq-Day & Leq-Night : Equivalent Noise Levels during Day & Night Times; TDS : Total Dissolved Solids; EC-Electrical Conductivity & SAR-Sodium Absorption Ratio.

ஆய்வின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- ❖ சேகரிக்கப்பட்ட வானியல் புள்ளி விபரங்கள், உள்ளூர் பருவ வானிலையையே பிரதிபலிக்கின்றன.
- ❖ ஆய்ந்தறியப்பட்ட சுற்றுப்புறக் காற்றின் தரம், Revised National Ambient Air Quality (NAAQ) 24-hourly Norms for Industrial, Residential, Rural and Other Areas-ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குள்ளேயே அமைந்துள்ளன.
- ❖ சுற்றுப்புற ஒலிச்சூழலின் அளவுகள் (Leq), பகல் மற்றும் இரவு நேரங்களில், MoEF&CC வரையறுத்துள்ள வரைமுறைகளுக்கு உட்பட்டே அமைந்துள்ளன.
- ❖ நில மேற்பரப்பு நீரின் தரம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் (CPCB) வரையறைகளுக்கும், நிலத்தடி நீரின் தரம் IS:10500-2012 வரையறைகளுக்கும் உட்பட்டே அமைந்துள்ளன.
- ❖ மண்ணின் தரம், தகுந்த சீரமைப்பிற்குப் பின், வேளாண்மை மற்றும் தாவர வளர்ச்சிக்கு உகந்ததாகவே உள்ளது.
- ❖ ஆய்வுப் பகுதியில், சுற்றுச்சூழல் முக்கியத்துவம் பெற்ற இடங்கள் எதுவும் அமைந்திருக்கவில்லை. ஆய்வுப் பகுதியில் அட்டவணை–I பட்டியலில் இடம் பெற்றுள்ள மயில்கள் வாழ்வதால், அங்கீகரிக்கப்பட்ட மயில்களுக்கான பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மற்ற பொதுவான தாவர இனங்களும், பொதுவாக வளர்க்கப்படும் விலங்கினங்களும் காணப்பட்டன.
- ❖ ஆய்வுப் பகுதி, குறைந்த மக்கள் தொகை அடர்த்தியுடனும் பெரும்பாலான கிராமங்கள் அடிப்படை வசதிகளுடனும் அமைந்துள்ளன.

Fig. : 3.1 Environmental Quality Monitoring Stations



எனவே, உத்தேச திட்டத்திற்கு, சுற்றுச்சூழல் அங்கங்களில் போதுமான அளவு இடைத்தாங்ககம் (Buffer) உள்ளது.

3.0 எதிர்நோக்கப்படும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

குவாரி திட்டமாக இருப்பதால், பெரிய அளவிலான நிர்மாணங்களோ, கட்டுமானங்களோ தேவையில்லை. குவாரிப் பகுதியில் ஒரு பணியிட அலுவலகம் தற்காலிக கட்டமைப்புகளின் மூலம் அமைக்கப்படும். இயக்கநிலையின்போது உண்டாகும் எனக் கண்டறியப்பட்ட தாக்கங்கள் **அட்டவணை-3.1-ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை : 3.1 அடையாளம் காணப்பட்ட சுற்றுச்சூழல் தாக்கங்கள்

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & எதிர்நோக்கப்படும் தாக்கங்கள்
1	**நிலச்சூழல்** : குவாரி குத்தகைப் பகுதியின் மொத்த விஸ்தீரணமான 158.865 ஹெக்டேரில், 111.685 ஹெக்டேர் மட்டுமே அகழ்விப்பதற்கான பரப்பளவாக இருக்கும். 4.872 ஹெக்டேர் பரப்பளவு, அகழ்விக்கப்பட்டு மீண்டும் இட்டு நிரப்பப்பட்ட பகுதியாக இருக்கும். திட்ட காலத்தின் இறுதியில், சுமார் 47.180 ஹெக்டேர் பரப்பளவு (மொத்த திட்டப்பரப்பில் 29.70%), பசும்பரப்பு உருவாக்கம் / மீள்காடுவளர்ப்பிற்காக பயன்படுத்தப்படும்.
2	**வாகன போக்குவரத்து அளவு** : சுரங்க/குவாரி போக்குவரத்து சாலை - பந்தல்குடி சாலை சந்திப்பில், தற்போதுள்ள வாகன போக்குவரத்தின் அளவு நாளொன்றுக்கு 4,558 பயணியர் வாகன அலகுகள் (Passenger Car Units - PCU/day) @ மணிக்கு 189.92 PCU என்ற அளவில் உள்ளது. திட்டத்தின் இயக்க நிலையின்போது, தற்போதுள்ள வாகன போக்குவரத்து அளவுடன் கூடுதலாக நாளொன்றுக்கு 536 வாகனங்கள் (நாளொன்றுக்கு 1608 PCU) என்ற அளவில் வாகன போக்குவரத்தின் அளவு அதிகரிக்கும். ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த போக்குவரத்து அளவு நாளொன்றுக்கு 6,166 PCU @ மணிக்கு 252.96 PCU என்ற அளவில் இருக்கும். இத்திட்டத்தால் எதிர்நோக்கப்படும் போக்குவரத்து அளவு (மணிக்கு 63.04 PCU) அதிகரிப்பினைக் கையாள, தற்போதுள்ள சுரங்க போக்குவரத்து சாலையே போதுமானதாக உள்ளது.
3	**காற்றின் தரம்** : சுரங்க/குவாரி அகழ்விப்புப் பணிகள், கனிமங்களை டிப்பர்களில் ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரத்து செயல்பாடுகளால் பணியிட தூசு உமிழ்வுகள் உற்பத்தியாகும். கனரக சுரங்க இயந்திரங்கள் / உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்களால் புகை உண்டாகும். தற்போதுள்ள கிரஷர் & கனிம பிரித்தெடுப்பு / சுத்திகரிப்பு ஆலைகளிலுள்ள புகைபோக்கி உமிழ்வுகளும் சுரங்கங்கள்/குவாரிகளுடன் சேர்த்து, ஒருங்கிணைந்த தாக்கங்களின் மதிப்பீட்டிற்காக கணக்கில் கொள்ளப்பட்டன. வாகன போக்குவரத்தால் உண்டாகும் தாக்கங்களையும் உள்ளடக்கி, காற்று மாசு காரணிகளின் அதிகபட்ச தரைதளமட்டச் செறிவின் அளவினை (GLCs) முன்கணிப்பு மதிப்பீடு செய்ய, AERMOD View மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. காற்று மாசு காரணியின் முன்கணிப்பு மதிப்பீடு செய்யப்பட்ட அதிகபட்ச தரைதளமட்டச் செறிவின் அளவு PM2.5 - 0.24 ug/m^3 மற்றும் PM10 - 0.91 ug/m^3. இந்த காற்று மாசு காரணிகளால் உண்டாகும் அதிகபட்ச தாக்கம் திட்ட அமைவிட எல்லைகளிலிருந்து 0.8 கி.மீ சுற்றளவுள்ள சுற்றுப்புறப் பகுதிக்குள்ளேயே அமைந்திருக்கும் என கண்டறியப்பட்டுள்ளது. மேலும், உத்தேச திட்ட செயல்பாடுகளுக்கு, காற்றுச் சூழலில் போதுமான இடைத்தாங்கக அளவு உள்ளது.
4	**ஓசை அளவுகள்** : இந்தக் குவாரியில் துளையிடுதல் மற்றும் வெடித்தல் செயல்பாடுகள் எதுவும் கிடையாது. எனவே, அதிர்வுகள் எதுவும் உண்டாகாது. அகழ்வித்தல்,

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & எதிர்நோக்கப்படும் தாக்கங்கள்
	கனிமங்களை டிப்பர்களில் ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரத்து செயல்பாடுகள் முதலியன ஒலி உற்பத்திக்கு மூலகாரணமாக அமைகின்றன. இயந்திரங்களால் உண்டாகும் ஒலி அளவுகள் 8 மணிநேர பணியிட உட்படுத்தலுக்கு, <85 dB(A)என்ற அளவில் பேணப்படும். குவாரி எல்லைகளில் உள்ள சுற்றுப்புற ஒலிச்சூழலின் அளவுகள் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவான, பகலில் <55 db(A) மற்றும் இரவில் <45 dB(A) என்ற வரையறைக்குள்ளேயே கட்டுப்படுத்தப்படும்.
5	**நீர்ச்சூழல் :** **நிலமேற்பரப்பு நீரின் மீதான தாக்கங்கள்** : திட்டப்பகுதி பெரும்பாலும் சமதளமாகவும் தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு நோக்கி சரிவாகவும் அமைந்துள்ளது. பருவகால ஆறான உப்பு ஓடை குவாரி குத்தகைப் பகுதிகளின் வடிகாலாக அமைந்துள்ளது. குவாரி குத்தகை-III-ல், 3 பருவகால முதல்நிலை ஓடைகள் உற்பத்தியாகி கிழக்கில் உப்பு ஓடையில் கலக்கின்றன. பரிந்துரைக்கப்பட்டபடி, குவாரி குத்தகைப் பகுதிகளில் அமைந்துள்ள ஓடைகளின் இருபுறமும் 50 மீ பாதுகாப்பு இடைவெளி பகுதிக்காக ஒதுக்கப்படும். குவாரி செயல்பாடுகளுக்கான வரையறுக்கப்பட்ட பகுதிக்கான அறிவிப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சுரங்கத் திட்டம் முதலியவற்றின்படி அந்த ஓடைகளின் நீரோட்ட வழி, குவாரி செயல்பாட்டின் இறுதிநிலை வரை தற்போதுள்ளது போலவே பராமரிக்கப்படும். திட்டப்பகுதியின் பொதுவான மழையளவு 726 மி.மீ. ஆகும். Manual of Artificial Recharge of Ground Water(CGWB 2007)-ன்படி குவாரி குத்தகைப் பகுதியில் திட்டத்திற்கு முந்தைய மற்றும் பிந்தையகாலத்து மழைநீரின் அளவு கணக்கிடப்பட்டுள்ளது. திட்ட செயல்பாட்டிற்கு முன்பு, குத்தகைப் பகுதியில் மழைநீரோட்டத்தின் அளவானது, ஆண்டொன்றிற்கு 2,30,672 கிலோ லிட்டர் (கி.லி). மற்றும் குத்தகையின் இயக்க நிலையில், குத்தகைப் பகுதியில் மழைநீரோட்டத்தின் அளவானது, ஆண்டொன்றிற்கு 2,13,546 கி.லி. என்ற அளவில் இருக்கும். அதிகமான பசும்பரப்பு/மீள்காடுவளர்ப்புப் பகுதியால், இயக்க நிலையில் ஆண்டொன்றிற்கு மழைநீரோட்டத்தின் அளவு குறைவான அளவிலேயே இருக்கும். இதுவே, இத்திட்டத்தால் நிலமேற்பரப்பு நீராதாரங்களின் மீது உண்டாகும் தாக்கமாகும். குவாரி பள்ளத்திலிருந்து, நீர் வெளியேற்றம் எதுவும் கிடையாது. **நிலத்தடி நீரின் மீதான தாக்கங்கள்** : குவாரி செயல்பாடுகளால் நிலத்தடி நீர் மட்டத்தில் குறுக்கீடு எதுவும் இருக்காது. குவாரிகளின் அன்றாட நடைமுறை உபயோக நீர்த் தேவையான நாளொன்றுக்கு சுமார் 3 கி.லி என்ற அளவானது, பந்தல்குடி RO Plant மூலம் பூர்த்திசெய்யப்படும். தூசுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு 2 கி.லி. மற்றும் பசும்பரப்பு மேம்பாடு மற்றும் பராமரிப்பிற்கு 50 கி.லி நீர் தேவை. இவை பந்தல்குடி சுரங்கப்பள்ளத்தின் நீரின் மூலமாக பூர்த்திசெய்யப்படும். பணிமனை எதுவும் உத்தேசிக்கப்படாததால், குவாரி குத்தகைப்பகுதியிலிருந்து கழிவுநீர் உற்பத்தி எதுவும் கிடையாது. குவாரியிலிருந்து உற்பத்தியாகும் நாளொன்றுக்கு 2.5 கி.லி அளவிலான அன்றாட உபயோக மனிதக் கழிவுநீர், தகுந்த அளவுள்ள கழிவுநீர் சேகரிக்கும் தொட்டி மற்றும் மூடு குழியின் மூலம் உரிய முறையில் சுத்திகரிக்கப்படும். எனவே, நிலத்தடி நீரின் மீதான தாக்கங்கள் குறைந்த அளவிலேயே இருக்கும்.
6	**உயிர்ச் சூழல்** : குவாரி குத்தகை சுற்றளவுப் பகுதிகளில், சுற்றுச்சூழல் முக்கியத்துவம் பெற்ற இடங்கள் எதுவும் அமைந்திருக்கவில்லை. பொதுவான தாவர இனங்களும், பொதுவாக வளர்க்கப்படும் விலங்கினங்களும் காணப்பட்டன. ஆய்வுப் பகுதியில் அட்டவணை–I பட்டியலில் இடம் பெற்றுள்ள மயில்கள் வாழ்வதால்,

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & எதிர்நோக்கப்படும் தாக்கங்கள்
	வனத்துறையுடன் ஆலோசித்தபின்பு மயில்களுக்கான பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, சமா்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பகுதியில் இயல்பான தாவர மற்றும் விலங்குகள் உள்ளதால், உயிர்ச் சூழல் மீதான தாக்கங்கள் குறைந்த அளவிலேயே இருக்கும். குத்தகையின் சுற்றுப்புறப் பகுதிகள் புன்செய் விவசாய நிலங்களால் சூழப்பட்டுள்ளன. தற்போதுள்ள சுற்றுப்புறக் காற்றின் தரத்தில் மாசு காரணிகள் குறைந்த அளவில் இருப்பதாலும், கணிக்கப்பட்ட தரைதள மட்டச் செறிவின் அளவுகள் மிகக்குறைவாக/குறிப்பிடத்தக்க அளவு இல்லாததாலும், இந்தத் திட்டத்தால் சுற்றுப்புறத்திலுள்ள விவசாய நிலங்களின் மீது எவ்வித எதிர்மறை தாக்கங்களும் உண்டாகாது.
7	**சமூகப் பொருளாதாரம்** : சிமெண்ட் ஆலையில், நேரடியாக சுமார் 465 நபர்களுக்கும், மறைமுகமாக சுமார் 600 நபர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பந்தல்குடி பகுதியில் தற்போதுள்ள மற்றும் உத்தேசித்துள்ள சுரங்கங்கள் மற்றும் குவாரிகளால், நேரடியாக சுமார் 252 நபர்களுக்கும் மறைமுகமாக சுமார் 393 நபர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும். இந்த சுரங்கங்களின் மொத்த பணியாளர்களில், 80% பேர் உள்ளூர் மக்கள் ஆவர். தற்போது குவாரி குத்தகை-III நேரடியாக 72 நபர்களுக்கும் மறைமுகமாக 50 நபர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கும். RCL நிறுவனம் பெருநிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதி ஒதுக்கீட்டின்கீழ் தனது சுரங்கங்கள் மற்றும் ஆலைகளிலும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பல்வேறு சமூகநல செயல்பாடுகளை மேற்கொண்டுவருகிறது. பிப்ரவரி 27, 2014-ல் அறிவிக்கப்பட்ட Ministry of Corporate Affairs –ன் விதிமுறைகளின்படி RCL நிறுவனத்தால் பெருநிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயல்பாட்டுக் குழு (CSR) அமைக்கப்பட்டுள்ளது. பெருநிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயல்பாட்டுக் குழு மற்றும் அறிவிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெருநிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயல்பாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில், CSR செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும். நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு, கூட்டாண்மை சுற்றுச்சூழல் பொறுப்பு & கூட்டாண்மை சமூக பொறுப்பு உள்ளிட்ட செயல்பாடுகள், இப்பகுதியின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் நேர்மறையான தாக்கங்களை உண்டாக்கும்.
8	**தொழில்சார் சுகாதாரம்** : RCL நிறுவனம் தனது பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் உடல்நல பராமரிப்புத் தேவைகளுக்கு துணைபுரியும் வகையில், சிமெண்ட் ஆலை மற்றும் சுரங்கங்களில் தொழில்சார் சுகாதார மையத்தினை இயக்கி வருகிறது. தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் தகுந்த கால இடைவெளிகளில் நுரையீரல், கேள்திறன் அளவீடு, இரத்த பரிசோதனை, நெஞ்சக எக்ஸ்ரே பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு தேவை அடிப்படையிலான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. RCL நிறுவனம் குவாரி குத்தகை-III-ல் தனது பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பணிச்சூழலை வழங்கிட உறுதி பூண்டுள்ளது. சுரங்கத் தொழிலாளர்கள் அனைவருக்கும் தனி நபர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்படும். உடனடி மருத்துவ சிகிச்சைகளுக்காக முதலுதவிப் பெட்டிகள் உள்ளன. தொழில்சார் சுகாதார

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & எதிர்நோக்கப்படும் தாக்கங்கள்
	கண்காணிப்புத் திட்டங்கள் அனைத்து தொழிலாளர்களுக்கும் முறையாக மேற்கொள்ளப்படும்.
9	**பருவநிலை மாற்றம்** : குத்தகை ஒளியமைப்பிற்குத் தேவைப்படும் சுமார் 50 KVA மின் வினியோகம் TANGEDCO தொகுப்பிலிருந்து பெறப்படும். சுரங்க இயந்திரங்கள் / உபகரணங்களின் இயக்கங்களுக்கான எரிபொருள் தேவையான நாளொன்றுக்கு 2,000 லிட்டர் HSD, தகுந்த அனுமதிகளுடன் ஆலையில் அமைக்கப்பட்டிருக்கும் எரிபொருள் சேமிப்புக் கலன்களிலிருந்து, அனுமதி பெறப்பட்ட நடமாடும் பவுசர்களின் மூலம் பெறப்படும். சுரங்கத்தில் 380 KVA DG (standby) ஒலி தடுப்பு அமைப்புகள் மற்றும் மத்திய / மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களின் விதிமுறைகளுக்கிணங்க புகைபோக்கிகளுடனும் நிறுவப்படும். சுமார் 47.180 ஹெக்டேர் பரப்பளவில் (மொத்த திட்டப்பரப்பில் 29.70%), வேம்பு, புங்கன், தேக்கு உள்ளிட்ட சுமார் 11,250 உள்ளூர் மரவகைகளுடன் @ 500 மரங்கள்/ஹெக்டேர் என்ற அளவில் பசும்பரப்பு உருவாக்கப்பட்டு, 90% உயிர்வாழும் திறனுடன் பராமரிக்கப்படும்.

4.0 சுற்றுச் சூழல் கண்காணிப்பு திட்டம்

தகுந்த கால இடைவெளிகளில், குவாரி குத்தகையின் சுற்றுப்புறத்தில், NAAQ Norms-ன்படி காற்றின் தரம் 4 இடங்களிலும், பணியிட தூசு உமிழ்வுகள் 4 இடங்களிலும், ஒலி அளவுகள் (சுற்றுப்புறம் & பணியிடம்), நில மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் தரம் தலா 4 இடங்களிலும், மண்ணின் தரம் 3 இடங்களிலும் பரிசோதிக்கப்பட / கண்காணிக்கப்பட வேண்டும். மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் (MoEF&CC) மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வரையறைகளின்படி, அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் மூலம் ஆய்ந்தறியப்பட்டு, ஆய்வறிக்கைகள் தகுந்த கால இடைவெளிகளில், மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம், இந்திய சுரங்கச் செயலகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்படும்.

5.0 கூடுதல் ஆய்வுகள்

விரிவான அபாயக் கணிப்பீடு மற்றும் நிவர்ப்பண நடைமுறைகள் வரைமுறைப்படுத்தப்பட்டு, சிறப்பான பயன் அளிக்கக்கூடிய இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் இடர்பாடுகளுக்கான பேரிடர் மேலாண்மைத் திட்டம் (DMP) உருவாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விபத்துக்களைக் குறைக்கும் வகையில் பாதுகாப்பு வழிமுறைகள் உறுதிபடுத்தப்படும்.

6.0 திட்ட பயன்கள்

சுற்றுச் சூழல் பயன்கள் : இந்த திட்டம், சிமெண்ட் ஆலைக்கு தொடர்ந்து கன்கர் மூலப்பொருள் விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்கிறது. கனிமப் பாதுகாப்பு நடவடிக்கையாக, சிமெண்ட் உற்பத்தியில் மூலப்பொருளுடன் கன்கர் கலப்பதன் மூலம் சிறுகனிமங்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றன.

நிதிசார் பயன்கள் : திட்டத்தின் மூலதன மதிப்பு ரூ.4.75 கோடிகள். MMDR Act 2015-ன் படி, கனிமங்களுக்கான மண்ணுரிமைத் தொகையில் 10% மாவட்ட கனிம கூட்டமைப்பு நிதிக்கு ஒதுக்கப்படும். அரசுக்கு வழங்கப்படும் கனிமங்களுக்கான மண்ணுரிமைத் தொகை மற்றும் பசுமை நிதி, உள்ளூர் மற்றும் பிராந்திய பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

சமூக பயன்கள் : இந்த திட்டத்தால், நேரடியாக 72 நபர்களுக்கும் மறைமுகமாக 50 நபர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும். நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு, கூட்டாண்மை சமூகப் பொறுப்பு, கூட்டாண்மை சுற்றுச்சூழல் பொறுப்பு முதலான செயல்பாடுகள் இப்பகுதியின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் நேர்மறைத் தாக்கங்களை உண்டாக்கும்.

7.0 சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம்

சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்திற்கு கட்டுமான நிலை கருத்தில் கொள்ளப்படாது. தற்போதுள்ள சுற்றுச்சூழல் நிலை மற்றும் தாக்கங்களுக்கான மதிப்பீடுகளின் அடிப்படையில், கட்டுமான மற்றும் இயக்க நிலையில், சுற்றுச்சூழல் பண்புகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய தாக்கங்களுக்கான நிவர்ப்பண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. குவாரி இயக்கநிலையில் உத்தேசிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள் **அட்டவணை** 7.1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை : 7.1 உத்தேசிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்.

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்
1	நிலச்சூழல் : ❖ குவாரி குத்தகைப் பகுதியின் சுற்றெல்லைகளில், மண்மேடுகளால் வரப்புகள் அமைப்பதன் மூலம், மண்கரைந்து செல்வது தடுக்கப்பட வேண்டும். ❖ குவாரி குத்தகைப் பகுதியைச் சுற்றி பூமாலை வடிவ வடிகால்கள் கட்டமைக்கப்பட்டு தகுந்த கால இடைவெளிகளில் பராமரிக்கப்பட வேண்டும். ❖ குவாரி குத்தகைப் பகுதியின் சுற்றெல்லைகள் மற்றும் பாதுகாப்பு இடைவெளிக்கான பகுதிகளில் பசும்பரப்பு உருவாக்கி பராமரிக்கப்பட வேண்டும். ❖ நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை குறியீடு செய்யப்பட்டு மறுசீராய்விற்காக அடையாளப்படுத்தப்படவேண்டும். ❖ அகழ்விக்கப்பட்ட குவாரி குத்தகைப் பகுதிகளில் திடக்கழிவுகளை மீண்டும் இட்டு நிரப்புவதன் மூலம் நிலத்தின் இயல்புநிலை மீட்கப்படவேண்டும். ❖ மேற்பரப்பு மண் குவியல்களின் கீழ்ப்பகுதி மற்றும் பயன்பாட்டிலில்லாத சரிவுகளிலும் செடிகள் நடுவதன் மூலம் மண்ணரிப்பு தடுக்கப்படவேண்டும்.
2	போக்குவரத்து : ❖ சுரங்க போக்குவரத்து சாலைகளில் நீர் தெளிப்பான்கள் அமைத்து அடிக்கடி நீர் தெளித்து பணியிட தூசு உமிழ்வுகள் கட்டுப்படுத்தப்படவேண்டும். ❖ போக்குவரத்தின் போது கனிமங்கள் கீழே சிந்துவதை தவிர்க்க, அனைத்து டிப்பர்களும் தார்ப்பாய்களைக் கொண்டு முழுவதும் மூடிய நிலையில் கொண்டு செல்ல வேண்டும். ❖ கண்டிப்பாக வாகனங்களில் அளவுக்கு மீறிய பாரங்களை ஏற்றாதிருக்க வேண்டும். ❖ வாகன வேகத்தின் அளவு மணிக்கு 30 கி.மீ. என வரையறுக்கப்பட்டு வேகக் கட்டுப்பாடு முறைப்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். ❖ டிப்பர்களுக்கு ‘மாசு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது’ என்பதற்கான சான்றுக்கு இணங்குவது உறுதிபடுத்தப்பட்டு, தகுந்த கால இடைவெளிகளில் பரிசோதிக்கப்பட வேண்டும்.

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்
	❖ பொதுச் சாலைகளில் சரக்கு போக்குவரத்து வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட வேண்டும். ❖ சுரங்கத்திலிருந்து வெளியேறும் வாகனங்களைக் கையாள, சுரங்கச் சாலை சந்திப்பில் பாதுகாப்புக் காவலர்கள் பணியிலமர்த்தப்பட வேண்டும்.
3	**காற்றின் தரம் :** ❖ சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில், துளையிடுதல் மற்றும் வெடித்தல் செயல்பாடுகள் எதுவுமின்றி, குவாரி செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். ❖ குவாரியின் சுற்றெல்லைகள், சுரங்கச்சாலையோரங்கள் மற்றும் திடக்கழிவுக் குவியல்களில் அடர்ந்த பசுமைப் பகுதிகளை உருவாக்கி பராமரிக்கவேண்டும். ❖ அகழ்விப்புப் பகுதிகள், ஏற்றுமிடம், சுரங்க போக்குவரத்துச்சாலை முதலான பகுதிகளில் தகுந்த கால இடைவெளிகளில் நீர் தெளிக்கப்பட வேண்டும். ❖ குவாரி அகழ்விப்பு உபகரணங்களை தகுந்த கால இடைவெளிகளில் பராமரித்து பழுதான பாகங்களை மாற்றவேண்டும். ❖ டிப்பர்களை தகுந்த கால இடைவெளிகளில் பராமரிக்க வேண்டும். ❖ சுற்றுப்புற காற்று மற்றும் பணியிட தூசு உமிழ்வுகளின் தரம் தகுந்த கால இடைவெளிகளில் கண்காணிக்கப்பட்டு, அறிக்கைகள் குறிப்பிட்ட துறைகளுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.
4	**ஓசை அளவுகள் :** ❖ அகழ்விப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் கனரக சுரங்க உபகரணங்கள், ஒலி அளவைக் குறைக்கும் வகையிலான உள்கட்டமைப்புடன் வடிவமைக்கப்பட வேண்டும். ❖ சுரங்க இயந்திரங்கள் / உபகரணங்களை இயக்குபவர்களின் அறைகள் ஒலிபுகாதவகையில் வடிவமைக்கப்படவேண்டும். ❖ அதிகமான ஒலி உண்டாகும் பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் தேவையான தனி நபர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்பட வேண்டும். ❖ ஒலித்தடைகளாகச் செயல்படும் வகையில் சுரங்கக் குத்தகையின் சுற்றெல்லைகளில் அடர்ந்த பசுமைப் பகுதிகளை உருவாக்கி பராமரிக்கவேண்டும். ❖ சுற்றுப்புற ஒலிகளின் அளவு, MoEF&CC-ல் குடியிருப்புப் பகுதிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒலி அளவுகளுக்கான வரையறைகளுக்குள்ளேயே இருக்கவேண்டும். ❖ சுற்றுப்புற மற்றும் பணியிடங்களில் உண்டாகும் ஒலி அளவுகள், தகுந்த கால இடைவெளிகளில் கண்காணிக்கப்பட்டு, அறிக்கைகள் குறிப்பிட்ட துறைகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5	**நீர்ச்சூழல் :** ❖ இயற்கை வடிகால்கள், ஓடைகளின் நீரோட்ட வழி, இறுதிநிலை வரை எவ்வித இடையூறுமின்றி தற்போதுள்ளது போலவே பராமரிக்கப்பட வேண்டும். ❖ திட்ட செயல்பாட்டிற்கு முன்புள்ள நீர்வழித்தடங்களை இயன்ற அளவு அதேநிலையில் பராமரிப்பதன் மூலம் இயக்க நிலையில் மழைநீரோட்டத்தின் அளவு பாதிக்கப்படாது. ❖ திட்ட செயல்பாட்டிற்கு முன்பு, குத்தகைப் பகுதியில் விழும் மழைநீரின் அளவு, இயக்க நிலையிலும் பராமரிக்கப்பட வேண்டும்.

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்
	❖ பூமாலை வடிவ வடிகால்கள் அமைப்பதன் மூலம், குவாரி மற்றும் திடக்கழிவு குவியல்களிலிருந்து மழைநீர் வழிந்தோடி வீணாவது தடுக்கப்பட்டு முறைபடுத்தப்படவேண்டும். ❖ படிவுத் தொட்டிகள் மற்றும் பூமாலை வடிவ வடிகால்கள் தகுந்த கால இடைவெளிகளில் தூர் வாரப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். ❖ குவாரியின் சுற்றுப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளின் நீர் மட்டம் மற்றும் நீரின் தரம் தகுந்த கால இடைவெளிகளில் கண்காணிக்கப்பட வேண்டும். ❖ சேகரிக்கப்பட்ட நீரின் தரத்தின் தரவுகள், தகுந்த கால இடைவெளிகளில் அரையாண்டு இணக்க செயற்பாட்டு அறிக்கையாக, தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையம் (SEIAA-TN), மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் (MoEF&CC) பிராந்திய அலுவலகம், சென்னை ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6	**உயிர்ச்சூழல் :** ❖ சிறந்த முறையில் பசும்பரப்பு உருவாக்கப்பட்டு, சிறந்த உயிர்வாழும் (90%) திறனுடன் பராமரிக்கப்பட வேண்டும். ❖ பசும்பரப்பு மேம்பாட்டுக்கு வட்டார தாவர வகைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். ❖ பழம்தரும் மரங்கள் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். ❖ கரிமம், மண்ணில் **மண்ணுயிர்ச்சத்து கரிமப்பொருளாக** தேக்கிவைக்கப்படுவதே முதன்மையான வழியாகும். காலநிலை, இயற்கையான தாவரச்செறிவுகள், மண்ணின் அமைப்பு மற்றும் நீரோட்ட வடிகால் அமைப்புகள் உள்ளிட்டவை கரிமத்தின் தேக்கிவைக்கப்படும் அளவு மற்றும் தேக்கிவைக்கப்படும் காலநெடுமை முதலியவற்றை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும்.
7	**சமூகப் பொருளாதாரம் :** சுரங்கப்பகுதியைச் சுற்றிலும் மற்றும் அருகிலிருக்கும் கிராமங்கள் மற்றும் உள்ளூர் மக்களுக்கு பெருநிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயல்பாடுகளுக்கான (CSR) விதிமுறைகளின்படி பல்வேறு சமுதாய மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கு குடிநீர் வசதிகளை உருவாக்கி பராமரித்தல், பள்ளிகளில் குறிப்பாக பெண்களுக்கு கழிவறை வசதிகளை அமைத்துக்கொடுத்தல், கணினி மையங்களை அமைத்தல், கிராமத்து சாலைகள் மற்றும் குளங்களைப் பராமரித்தல், சூரிய ஒளி ஆற்றலுடன் தெருவிளக்குகளை அமைத்தல், இலவச மருத்துவ முகாம்களை நடத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும்.
8	**தொழில்சார் சுகாதாரம் :** ❖ அனைத்துத் தொழிலாளர்களும் வேலையில் சேரும்போதும், மற்றும் பணியிலிருக்கும் போதும், தகுந்த கால இடைவெளிகளில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ❖ பணியில் சேர்வதற்கு முன்பு, பணியிலிருக்கும் போது மற்றும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் உள்ள அனைத்து பணிசார்ந்த விபரங்களும் தகுந்த கால இடைவெளிகளில் மதிப்பாய்வு செய்வதற்காக பராமரிக்கப்பட வேண்டும். ❖ தொழிலாளர்கள் அனைவருக்கும் தேவையான தனி நபர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்பட வேண்டும்.

வ. எண்	சுற்றுச்சூழல் கூறுகள் & சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்
	❖ ஓட்டுனர்கள்/இயந்திர இயக்குனர்களுக்கு, தொழிற்சூழலியலுக்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட இருக்கைகள் வழங்கப்பட வேண்டும்.

பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை : குத்தகைப் பகுதியில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு வீசப்படும் பிளாஸ்டிக் பயன்பாடு தடை செய்யப்படும். சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றான வாழையிலை, பாக்கு மட்டை, பனை தட்டு, பீங்கான் தட்டு, கோப்பை, துணிப்பை, சணல் பை, எஃகு குவளை ஆகியவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது.

சுற்றுச் சூழல் மேலாண்மை திட்ட நிதி ஒதுக்கீடு : இந்த திட்டத்தின் முதலீட்டு மதிப்பு ரூ.4.75 கோடிகள். சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்ட நடவடிக்கைகளுக்கான முதலீட்டு மதிப்பிற்காக ரூ. 30.00 லட்சங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்ட நடவடிக்கைகள், பசும்பரப்பு மேம்பாடு & பராமரிப்பு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு உள்ளிட்ட செலவினங்களுக்காக இயக்கநிலை செலவின மதிப்பிற்காக ஆண்டொன்றிற்கு ரூ.28.84 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வன அலுவலர் அங்கீகாரத்தின்படி, மயில் பாதுகாப்புத் திட்டத்திற்காக, 10 ஆண்டுகளுக்கு ரூ.15.80 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின்போது முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்ற ஒதுக்கப்படும் நிதி, 30.09.2020 தேதியிட்ட MoEF&CC அலுவலகக் குறிப்பாணை படி சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்ட மதிப்பில் சேர்க்கப்படும். கூட்டாண்மை சுற்றுச்சூழல் பொறுப்பு நிதி (CER) ஒதுக்கீடு ரூ.9.50 லட்சங்கள் மறவர்பெருங்குடி மற்றும் கொப்புச்சித்தம்பட்டி கிராமங்களுக்கு செலவிடப்படும்.

***